**தலைப்பு 296 - இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 296 - இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 29 ஆந் திகதி இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த ஏற்பாடும் செலவும்**

---

திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 63.19 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 57.05 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 6.14 மில்லியன் அதாவது 9.72 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 58.29 | 54.39 | 3.90 | 6.69 |
| மூலதனம் | 4.90 | 2.66 | 2.24 | 45.71 |
| மொத்தம் | **63.19** | **57.05** | **6.14** | 9.72 |

**2.2 வருமானக் கணக்குகள்**

**மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்**

திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டிற்காக 10.01.03.00 வருமானக் குறியீட்டிற்காக ரூபா 800 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், அவ்வருமான மதிப்பீடு 900 மில்லியன் வரை திருத்தம் செய்திருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 1,089 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 121 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | நிதி ஏற்பாட்டின் சதவீதமாக மிகை(பற்றாக்குறை) |
|---|---|---|---|
| மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை | |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 900 | 1,089 | 189 | 21 |

**2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 29601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 4.42 | 2.12 | 2.20 | 3.12 | 18.00 | 12.22 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கு

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்திற்குரிய 7002/0000/00/0048/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் மீதி ரூபா 98.86 மில்லியனாக இருந்தது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகாகவும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | ஒதுக்கீட்டு (அங்கீகரிக்கப்பட்ட செலவு) பேரேடு | நிதிப்பிரமாணம் 447 |
| (ii) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (iii) | பொருட் பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(1) |

### 3.2 வருமானக் கணக்குகள்

திணைக்களத்தின் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானத்தைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற பணிப்பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தகன. 10.01.03.00 ஆம் இலக்க வருமானக் குறியீட்டிற்குரித்தாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.
காசேட்டில் பெறுவனவாக அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் ஏனைய பெறுவனவுகளின் கூட்டுத்தொகை மாத்திரம் பதியப்பட்டிருந்ததுடன் அதற்குரிய வகைப்படுத்தப்பட்ட வருமானப் பெறுவனவுப் பேரேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

29601 ஆம் விட இலக்க முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 544,122 ஆக இருந்ததுடன், அந்நிலுவை மீதிகள் 01 வருடம் முதல் 02 வருடங்கள் வரையான காலப்பகுதியிலிருந்து நிலவி வந்திருந்த போதிலும் அந் நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதின் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையொன்றில் காணப்பட்டன.

### 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2015 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் 2015 பெப்ரவரி 23 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், பாதீட்டு மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் செயற்பாடுகளுக்காக வருடாந்த நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(அ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் நிலைமை, தரம் மற்றும் மாதிரிகளைப் பரிசோதிப்பதற்கான களப் பரிசோதனையொன்று மேற்கொள்ளல்.

(ஆ) அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களையும் செயலமர்வுகளையும் நடாத்துதல்

#### 3.4.2 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று காணப்படாமல் இருந்ததுடன் 2015 யூன் மாதம் வரை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு 2 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்டிருந்தன. எஞ்சிய காலப்பகுதிக்காக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு காலாண்டிற்கு ஒன்று வீதம் கூட்டப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டிற்காக குழுவின் 02 கூட்டத் தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2016 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அவ்வறிக்கை 2016 யூலை 27 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 3.6 செயலாற்றல்

### பிரதான செயற்பாடுகளுக்கு முரணான செயற்பாடுகள்

மதுசாரம் மற்றும் மெதனோல் இறக்குமதியின் போது மதுவரித் திணைக்களத்தின் பரிந்துரையின் பேரில் சமர்ப்பிக்கப்படுகின்ற அனைத்து மதுசாரம் மற்றும் மெதனோல் இறக்குமதி விண்ணப்பங்கள் மூலம் கோரப்பட்டிருந்த 41,535,866 லீற்றர் கூட்டுத்தொகையான முழு அளவிற்கும் இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

## 3.7 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 10 | 05 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 58 | 52 | 06 |
| (iv) | ஆரம்ப நிலை | 19 | 17 | 02 |
| | மொத்தம் | 88 | 75 | 13 |